1972 ஏப்ரல் 1]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்விக்கு முன்னால் 2 பேர் அந்தக் கேள்வியைக் கேட்டார்கள். அதற்குரிய காரணத்தை நான் சொன்னேன். காரணம் அங்கே இருக்கிற அதிகாரிகள், நலத்துறை அதிகாரிகள்கூட, அங்கேயிருக்கும் அரசியல் கட்சிகளின் தூண்டுதலின் பேரில், அங்கேயிருக்கிற சிப்பந்திகள் மற்ற அதிகாரிகளின் தூண்டுதலின் பேரிலும், ஹரிஜன மக்களுக்குக் கொடுக்கப்படுகிற அந்தப் பணத்தை, ரோடு போட, குடி தண்ணீர் தொட்டி போன்ற வேலைகளுக்குப் பயன் படுத்துவதற்காகக் கொடுக்கும் பணத்தை, ஹரிஜன மக்கள் அல்லாத கிராமங்களுக்குப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். எனவே கீழ்மட்டத்தில் இருக்கும் அதிகாரிகள், மாவட்ட நலந்துறை அதிகாரிகள் ஆகியவர்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுக்காமல், இதற்காகவே இருக்கிற நலத்துறை இயக்குநருக்கே அந்த அதிகாரம் தரப்பட்டிருக்கிறது. இதைத் தான் மாண்புமிகு மு. பழனிசாமி, நா. வீராசாமி ஆகியோரின் கேள்விக்கும் பதிலாகச் சொன்னேன்.

Paraffin factory

* 823 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up a paraffin factory in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) இந்திய அரசாங்கத்தின் கூட்டுத்துறை நிறுவனமான திருவாளர்கள் மெட்ராஸ் ரிபைனரிஸ் லிமிடெட் கழிவு மெழுகிலிருந்து தோல், மெழுகுவர்த்தி, நெசவம் இன்னும் ஏனைய தொழில்களில் பயன்படும் பாரபின் மெழுகு தயாரிக்கும் தொழிற்சாலையொன்றை நிறுவுவது பற்றி யோசித்து வருகிறது. உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்சாலையின் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 23,000 மெட்ரிக் டன்களாகும்.

THIRU N. DENNIS: May I know the market potential for this product?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதைக்கு அது கிடைக்கவில்லை என்ற குறை தான் இருக்கிறது. அதற்கு ஏராளமாகச் சந்தை இருப்பதாகத் தெரிகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த பாரபின் தொழிற்சாலையை மத்திய அரசே இங்கே அமைக்கிறார்களா? இந்த ஆண்டு அமைக்கப்படுமா? அப்படி அமைப்பதற்கு எவ்வளவு மூலதனம் போட வேண்டியிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விரைவில் ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் எடுப்பதாகச் சொல்லி இருக்கிருர்கள். எவ்வளவு மூலதனம் என்ற விவரம் இல்லே.

திரு. நா. வீராசாமி : தலேவர்வர்களே, இப்போது அமைக்க இருக்கிற தொழிற்சாலேக்குப் போதிய மூலப் பொருள்கள் பாரபின் வாக்ஸ் கிடைக்குமா? இப்போது சிறுசிறு தொழில் நடத்துபவர்களுக்கே அது கிடைக்கவில்லே. இந்தத் தொழிற்சாலேக்குத் தேவைப்படுகிற அடிப்படையில் மூலப்பொருள்கள் கிடைப்பதற்கு அரசாங்கம் என்ன வழிவகைகளே வகுத்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பாரபின் வாக்ஸ் தான் பல தொழிற்சாலே களுக்கு மூலப்பொருள். அது கிடைக்கவில்லே என்ற குறை இருப்பதாலே தான் அதையே உற்பத்தி செய்வதற்கு மெட்ராஸ் ரிபைனரீஸ் ஏற்பாடு செய்து வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : அந்தத் தொழிற்சாலே ஆரம்பிக்கப்பட்டால், எத்தனே தொழிலாளர்களுக்கு வேலேவாய்ப்புக் கிடைக்கும், என்ன மதிப்பீட்டில் அதை ஆரம்பிக்கும் உத்தேசம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது அவர்கள் யோசித்துக் கொண்டு வருகிருர்கள். மற்ற விவரங்கள் நம்மிடத்தில் வரவில்லே.

THIRU K. M. SUBRAMANIAM : Are the Government aware that because of shortage of paraffin wax, the handloom industry is affected, the match industry is affected and very huge blackmarketing is going on in this paraffin wax ? Will the Government take steps to control this and see that this is properly distributed?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது பற்றி நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்து இருக்கிறேம். நம்முடைய ஆலோசனே, நம்முடைய மாநிலத்திற்கு மட்டும், 5,000 டன் தேவைப்படுகிறது. அது முழுவதையும் நம்முடைய கையிலேயே ஒப்படைத்து, வழங்கும் உரிமையையும் வழங்க வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறேம்.

திரு. கே. எஸ். குப்பல் ராமகிருஷ்ணன் : தற்சமயம் சீராக விநியோகம் இல்லே என்ற காரணத்திஞல் நம்முடைய அரசாங்கம் உற்பத்தியை எல்லாம் பெற்றுக் கொண்டு தேவையானவர்களுக்குச் சீரான முறையில் விநியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமா? நண்பர் கேட்ட அதே கேள்வியைத்தான் நானும் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : அதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது.

1972 ஏப்ரல் 1]

திரு. கே. என். குமாரசாமி : பாரபின்னுக்கு மூலப் பொருள்கள் என்னென்ன என்பதை அரசு அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது மெட்ராஸ் ரிபைனரியிலிருந்து கிடைக்கப்படும் சில பொருள்களை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. தென் இந்திய மாநிலங்களிலும், அஸ்ஸாமிலும் இது போன்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் இதை உற்பத்தி செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். மெட்ருஸ் ரிபைனரியில் கிடைக்கக்கூடிய உபபொருள்களைக் கொண்டு இது உற்பத்தி செய்யப்படும்.

கைவினைப் பொருள்கள் விற்பனைச் சங்கம்

*824 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் விற்பனைச் சங்கத்தின் கிளை விற்பனை நிலையங்கள் தற்போது எத்தனை உள்ளன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எட்டு.

திரு. கே. எ. வகாப் : இந்த எட்டு இடங்களிலுள்ள கைவினைப் பொருள்கள் நிலையங்களில் டெல்லி, வேலூர் ஆகிய இடங்களைத் தவிர, மற்றவைகளெல்லாம் நஷ்டத்தில் நடைபெறுகின்றன என்பது உண்மையா? அதுமட்டுமல்ல. இவற்றிற்கான மூலதனத்திற்காகத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஏறத்தாழ ரூ. 10 லட்சம் கடனைப் பெற்று இருப்பதால், அவைகள் அதைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றன என்பது அரசுக்கு தெரியுமா? அதற்கு என்ன பரிகாரம் காணப் போகிறது இந்த அரசு?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கிட்டத்தட்ட ஆறு எம்போரியங்களில் லாபம் என்ற கணக்கு இருக்கிறது. லாபத்தையெல்லாம் விழுங்குகின்ற முறையிலே தலைமை சொஸைடியாக விளங்குகின்ற அமைப்பிலே ரூ. 5,99,564 நஷ்டம் என்று இருக்கிறது. பொதுவாக இதை எப்படிச் சீர்படுத்துவது என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசிலித்து வருகிறது.

தீக்குச்சித் தொழிற்சாலைகள்

*825 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொழில் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படும் தீக்குச்சி தொழிற்சாலைகள் எத்தனை?

(இ) அவை யாவை?